'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVII செப்டம்பர் கி.பி. 2026 சான்று : 201



# புதிய பணியாளர்கள் பயிற்சி



**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, என் வாஞ்சைக்குரிய வர்களே, நீங்களே என் மகிழ்ச்சி. நீங்களே என் வெற்றிவாகை. அன்பர்களே, ஆண்டவரோடுள்ள உறவில் நிலைத்திருங்கள் (பிலி 4:1) என்ற புனித பவுலடியாரின் வாழ்த்தின்படியே உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். நம் பணி குடும்பத்தில் உள்ள 23 வட்டாரங்களிலும் சீராய்வு தியானத்தை கடவுள் வெகு சிறப்பாக நடத்தி முடித்து இருக்கிறார். அதில் நாம் அனைவரும் மறு அர்ப்பணம் ஏற்றுள்ளோம். கிறிஸ்து அடிமை நிலையில் இருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள் (கலா 5:1) என்று புனித பவுலடியார் நம் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்து எச்சரிக்கிறார். எனவே நாம் கொடுத்த மறு அர்ப்பணத்தில் நிலைத்திருக்க முழு முயற்சி செய்வோம். கடவுளின் பேருதவியை, பேரிரக்கத்தை ,பேரருளை நாடி, அதில் வெற்றி பெறுவோம்.

சீராக் ஞான நூல் ஆசிரியர், 'நற்பயிற்சி இல்லாதவரிடம் ஞானம் மிகக் கடுமையாக நடந்து கொள்ளும். அறிவிலார் அதனோடு நிலைத்திருக்க முடியாது'(சீஞா6:20) என்று மிகத் தெளிவாக கூறுகிறார். நாம், நமது அர்ப்பணத்தில் நிலைத்திருக்க நற்பயிற்சி பெற வேண்டும். அதற்குப் பேருதவிபுரிவதுதான் புத்துயிர் செபம், வட்டாரத்தியான கூட்டம், ஆண்டுத் தியானம், களப்பணிப் பயிற்சி, களப்பணி போன்றவைகள். நமது இழத்தல் இதில் மிக மிக அவசியம். இழத்தல் இல்லாமல் எதையுமே பெற முடியாது. உழுது, விதைத்து, பின் நல்ல விளைச்சலுக்காகக் காத்திருக்கும் உழவர் போன்று ஞானத்தை அணுகு. ஞானத்துக்காக உழைப்போர் சிறிதளவு களைப்படைவர். விரைவிலேயே அதன் கனிகளை உண்பர்(சீஞா 6:19).

உண்மையை அறிந்த பின்னரும் வேண்டுமென்றே நாம் பாவத்தில் நிலைத்திருந்தால் இனி நமக்கு வேறு எந்தப் பாவம் போக்கும் பலியும் இராது( எபி 10: 26)என்பதை தெளிவாக உணர்ந்து கொள்வோம். ஜூலை- ஆகஸ்ட் கிபி- 2026 மாதங்களில் சீராய்வுத் தியானங்கள் மூலம் அனைத்து வட்டாரங்களிலும், நமது அர்ப்பண வாழ்வு பற்றிய தெளிவை கடவுள் நமக்கு வழங்கி இருக்கிறார். இனி மேலும் நாம் அசட்டையாக நடந்து கொண்டால், அவராலேயே நம்மைக் காக்க முடியாது. உன் அனுமதியில்லாமல் உன்னைப் படைத்த கடவுளால் உன் அனுமதியில்லாமல் உன்னை மீட்க முடியாது' என்ற புனித அகுஸ்தினாரின் அற்புதமான வரிகளைத் தியானித்து, நம் அர்ப்பணத்தில் நிலைத்திருக்க தீவிர முயற்சி எடுத்து பயிற்சி செய்வோம். நாம் ஒரு நல்ல நற்செய்தி பணியாளராக தொடர்வதற்கும், பின்வாங்குவதற்கும் உரிய சுதந்திரத்தை கடவுள் நமக்குத் தந்தார். தேர்ந்தெடுக்கும் உரிமையை நமக்கு போதிய அவகாசம் கொடுத்து வழங்கினார்.

சீடத்துவ அர்ப்பணத்தில், தன்னார்வ நற்செய்திப் பணியாளர் அர்ப்பணத்தில் நிலைத்திருத்தல் என்பது, நிலை நிறுத்திக் கொள்ள உறுதியாய் இருப்பது என்பது ஒரு முறை உறுதி எடுத்துவிட்டு அப்படியே இருப்பதல்ல. ஒவ்வொரு நாளும் கடவுளுக்கு 'ஆம்' என்றும் 'ஆமென்' என்றும் சொல்வது ஆகும். இதற்கான வழிமுறைகளை சீராய்வுத் தியானக் கூடுகைகளில் பலமுறை சொல்லப்பட்டிருக்கின்றன. மீண்டும் நினைவூட்டும் விதமாக இங்கு சிலவற்றைக் காண்போம்.

1. கடவுளோடு தினமும் உறவில், ஒன்றிப்பில் வளர வேண்டும். தனி செபம் இல்லாமல் அர்ப்பணத்தில் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது. பல ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது இந்த தனி செபம் தான். 'நானே திராட்சை செடி. நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது' (யோவா 15 :5) என்று மிகத் தெளிவாக இயேசு கிறிஸ்து ஆண்டவர் கூறியிருக்கிறார். கடந்த 23 ஆண்டுகளாக பணியாளர் இதழின் தலையங்கத்தில் இந்த தனி செபத்தை

வலியுறுத்தாத இதழே இருக்க முடியாது. அதே நேரத்தில் என் வழியாய் கடவுள் எங்கெல்லாம் அவரது செய்தியை வழங்குகிறாரோ அங்கெல்லாம் தனி செபம், அதாவது கடவுளோடு இணைந்து இருத்தல், ஒன்றிப்பில் இருத்தல் வலியுறுத்தப்படாமல் இருந்ததில்லை. யோவான் நற்செய்தி 15 வது பிரிவில் ஒன்று முதல் 8 வரை மீண்டும் மீண்டும் வாசித்து தியானிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தினசரி தனி செபம், இறை வார்த்தை வாசிப்பு, அமைதியான தியானம் ஆகியவற்றிற்கு அவசியம் நேரம் ஒதுக்க வேண்டும்.

2. அர்ப்பணித்த காரணத்தை, மறு அர்ப்பணம் கொடுத்த காரணத்தை அடிக்கடி நினைவு கூற வேண்டும். சில நேரங்களில் சோர்வு, ஏமாற்றம், விரக்தி, மனிதர்களின் குறைகள் போன்றவற்றால் 'நான் ஏன் மறுஅர்ப்பணம் கொடுத்தேன்?' என்ற கேள்வி வரும். அப்போது கடவுள் என்னை அழைத்தார் என்ற பேருண்மையை நினைவு கூற வேண்டும். 'நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களை தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்'(யோவா 15:16) என்று இயேசு கிறிஸ்து ஆண்டவர் கூறியுள்ளார். நான் பல்வேறு நேரங்களில் சோர்வடைந்து விரக்தி அடைந்து நின்ற நேரத்தில் எல்லாம் என் வாழ்க்கை துணைவியார் மூலம் இந்த இறை வார்த்தையை கடவுள் சுட்டிக்காட்டி திடப்படுத்தியிருக்கிறார். நானாகவா இதில் இணைந்தேன்? கடவுள் தானே என்னை இந்தப் பணிக்கு அழைத்தார் என்ற ஒரு கேள்வியை அவர் மூலம் என்னுள் எழுப்பப்படும். உடனே எனக்குள் ஒரு மாற்றம் நிகழும். அதனால்தான் அந்த வழிமுறையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். நம்மை அழைத்து அர்ப்பணிக்க வைத்தவர் நம் கடவுள் என்பதை உணர்ந்தால் இதில் நிலைத்திருப்போம்.

3. திரும்பிப் பார்க்காத மனநிலை வேண்டும். சீராய்வு தியானத்தில் வலியுறுத்தப்பட்ட இறை வார்த்தையை அடிக்கடி நினைவு கூர்வோம். 'கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்பட தகுதி உள்ளவர் அல்ல' (லூக் 9:62) என்று நம் ஆண்டவர் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார். அர்ப்பணம் கொடுத்த பிறகு, மறு அர்ப்பணம் கொடுத்த பிறகு திரும்பி பார்த்தால் நாம் இறையாட்சிக்கு உட்பட தகுதியற்றவர்கள் என்பதை புரிந்து கொள்வோம். இதன் பொருள் இறைவனிடம் கொடுத்த வாழ்க்கையை மீண்டும் மீண்டும் பின்னோக்கி இஸ்ராயேல் மக்கள் போல் பார்க்காமல் முன்னோக்கி நடப்பது ஆகும்.

4. உணர்வைவிட அழைப்பில் நம்பிக்கை வைக்க வேண்டும். தொடக்கத்தில் இருந்த மகிழ்ச்சி எப்போதும் இருக்காது. நாம் பணியில் சேர்ந்த, அர்ப்பணித்த அந்த நாள்களில் இருந்த உணர்வு நிலை தற்போது இருக்காது. சில நேரங்களில் நமது செப வாழ்வில் சுவை இருக்காது. தளர்ச்சி ஏற்படும். விரக்தி நிலை தோன்றும். பணியில் உற்சாகம் இருக்காது. அப்போது உணர்வை அடிப்படையாய் கொள்ளாமல் ஆழமான நம்பிக்கையை, அசைக்க முடியாத விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர வேண்டும்.' நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்' (2கொரி 5:7) என்று புனித பவலடியார் தெளிவாக கூறியிருக்கிறார். நான் பலமுறை மேலே சொல்லப்பட்ட மகிழ்ச்சியற்ற, தளர்வுற்ற, சுவையற்ற, விரக்தியுற்ற உணர்வுகளை அனுபவித்திருக்கிறேன். அதே நேரத்தில் உணர்வை மையப்படுத்தாமல் நம்பிக்கையை மையப்படுத்தியதால் பணி வாழ்வில் தொடர்கிறேன். இன்னும் ஒரு சில வழிமுறைகளை அடுத்த இதழில் சிந்திப்போம். நானும் நீங்களும் அர்ப்பணத்தில் நிலைத்து நிற்க ஒருவர் மற்றவருக்காய் தொடர்ந்து இறை உறவில் ஒன்றித்து, செபித்து உதவிக் கொள்வோம். இறை உதவியை தொடர்ந்து மன்றாடுவோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 2.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 9 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி G. லூயி ஜான் போஸ்கோ, நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. அடைக்கலம் நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 2.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 12 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி X. சகாய லூயி, நற்பணி நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. இராஜேந்திரன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 8.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 11 பேரும் இரண்டாவது குழுவில் 19 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி. J. மேரிபுஷ்பம், நற்பணி G.M.S.ராணி, நற்பணி P.சகாயராணி, நற்பணி. X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 9.08.2026 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி பெ.தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 9.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 16 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி M. சகாயமேரி, நற்பணி L. ஜோசப் இருதயம், நற்பணி V. யூஜின் அமல்ராஜ், நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 9.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 4 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி கோ.அம்பிகா எலியாஸ், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 9.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 8 பேரும் இரண்டாவது குழுவில் 18 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி அமல்ராஜ், நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி M. ரோஸ்ஸின் ரீட்டா, சகோதரி. சவரியம்மாள் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 16.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 11 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி

A. தமிழ் செல்வி, நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 16.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 3 பேரும் இரண்டாவது குழுவில் 21 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி A. சந்திரபுஷ்பா, நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 23.08.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 5 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

ஆகஸ்ட் 2026

## கடந்த மாதச் செயல்பாடுகள்

✱01.08.2026 அன்று சாயல்குடி வட்டார சீராய்வு தியானக் கூட்டம் புனித ஆரோக்கியமாதா கோவிலில் நடைபெற்றது.

✱02.08.2026 அன்று கமுதி வட்டார சீராய்வு தியானக் கூட்டம் புனித அந்தோனியார் கோவிலில் நடைபெற்றது.

✱02.08. 2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱05.08. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 41 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி S. பால்ராஜ், நற்பணி. அம்பிகா ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱05.08.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 83 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி செங்கோல்மேரி, நற்பணி புஷ்பராஜ், நற்பணி லில்லி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱08.08. 2026 அன்று மி.பட்டணம் வட்டாரத் சீராய்வு தியானக் கூட்டம் மகிண்டி திருவரங்கம் திருஇருதய ஆண்டவர் கோவிலில் நடைபெற்றது.

✱08.08.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி தை. அமல்ராஜ், நற்பணி M.லூயி ஜான் போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱09.08.2026 அன்று சருகணி வட்டார சீராய்வு தியானக் கூட்டம் திருஇருதய ஆண்டவர் கோவிலில் நடைபெற்றது.

✱09.08.2026 அன்று மணல்மேல்குடி புனித ஆரோக்கியமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱16.08.2026 அன்று மன்னார்குடி, புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி. S. அந்தோனி பிரகாஷ், நற்பணி S. மோட்சஅலங்காரம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱16.08. 2026 அன்று தஞ்சாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R. சூசைராஜ், நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱18.08.2026 அன்று அறந்தாங்கி, கிறிஸ்து அரசர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி தை. அமல்ராஜ், நற்பணி A. சத்தியேந்திரன் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱21.22.23.08.2026 ஆகிய நாள்களில் ஆண்டுத்தியாணம்-III அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. 112 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானத்தை சகோ. ஜோஸ்பின் விமலா, அருள்பணி பாஸ்கர் மற்றும் குழுவினர் வழிநடத்தினர்.

✱22.08.2026 அன்று தேவகோட்டை வட்டாரம் சீராய்வு தியானக் கூட்டம் புனித சகாயமாதா கோவிலில் நடைபெற்றது.

✱22.08.2026 அன்று மங்களபுரம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱22.08.2026 அன்று நாகபட்டிணம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱23.08. 2026 அன்று சி.கே.மங்களம் வட்டார சீராய்வு தியானக் கூட்டம் புனித பேதுரு கோவிலில் நடைபெற்றது.

✱23.08. 2026 அன்று எருக்கூர், புனித சிந்தாத்திரிமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱23.08.2026 அன்று சீர்காழி, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱23.08.2026 அன்று மயிலாடுதுறை, புனிதசவேரியார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J.அருள் இளங்கோ, நற்பணி A.R. சூசைராஜ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✱29.08.2026 அன்று செக்காலை வட்டார சீராய்வு தியானக் கூட்டம் சகாயமாதா கோவிலில் நடைபெற்றது.

✱30.08.2026 அன்று சிவகங்கை வட்டார சீராய்வு தியானக் கூட்டம் வியான்னி மையத்தில் நடைபெற்றது.

---

சிவகங்கை மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு நடத்திய 15 மாத சீடத்துவப் பயிற்சியை நிறைவு செய்த பொதுநிலையினர்

**அர்ப்பண ஏற்பு விழா**

**அ ர் ப் ப ண விழா**

நாள்&நேரம்: 27.09.2026, ஞாயிற்றுக்கிழமை, காலை 09.30 மணி

இடம்: புனித காணிக்கை அன்னை கோவில், முத்துப்பட்டணம்

தலைமை : **மேதகு முனைவர் லூர்து ஆனந்தம்**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

முன்னிலை: **அருள்பணி அ. சிங்கராயர்**
பங்குப்பணியாளர் & வட்டார அதிபர், இராமநாதபுரம்
**அருள்பணி ச. செபஸ்டின்**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர், சிவகங்கை

அர்ப்பணம் ஏற்க உள்ளோர் செப்டம்பர் 25 & 26 ஆகிய நாள்களில் பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெறும். **தெளிந்து தேர்தல்** தியானத்தில் தவிர்ப்பின்றி பங்கேற்ற வேண்டும். பங்கேற்காதோர் அர்ப்பணம் ஏற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

# ஆடுகளுக்கு வாயில் நானே

கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் ( மத் 7 : 7 )

மேலே கூறப்பட்டுள்ள இந்த ஆண்டவரின் வார்த்தையை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். மேலும், கேளுங்கள் தரப்படும் என்ற அருமையான பழைய பாடலை அடிக்கடி கேட்டிருக்கிறோம். அந்தப் பாடலின் வரிகள் ஆண்டவர் இயேசுவின் பிறப்பிலிருந்து இறப்பு வரை உள்ள நிகழ்வுகளை விவரிக்கிறது. ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள் என்று எசாயா குறிப்பிடுகிறார் ( எசா 55:6). கேளுங்கள், தட்டுங்கள், தேடுங்கள் என்ற வார்த்தைகள் பன்மையில் கூறப்பட்டுள்ளன. அப்படியானால் யாரோ ஒருவர் அல்ல மாறாக யார் வேண்டுமானாலும் கேட்கலாம் என்று பொருள். யாரிடம் கேட்பது? எப்படிக் கேட்பது என்பதை அறிந்து கொள்வதுதான் மிகவும் அவசியம். முதலாவது நாம் நம் விண்ணகத் தந்தையிடம் கேட்கவேண்டும். இரண்டாவது அவரது விருப்பம் அறிந்து கேட்கவேண்டும். தான் கேட்பது கடவுளுடைய திருவுளத்திற்கு ஏற்ப அமைந்திருப்பின் அவர் நமக்குச் செவி சாய்க்கிறார் (1 யோ 5:14) மூன்றாவது, ஆண்டவர் இயேசுவின் பெயரை அறிக்கையிட்டு கேட்கவேண்டும் ஏனெனில், அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் செய்யலாம். அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று அவரே வாக்களித்துள்ளார் (யோ 16 : 23) தந்தையாம் கடவுள் நமக்குத் தந்துள்ள அத்தனை வாக்குறுதிகளும் கிறிஸ்து வழியாகவே நிறைவேறுகின்றன (2 கொரி 1:20). நான்காவது, நாம் கேட்டவற்றை பெற்றுக் கொள்வோம் என்பதை உறுதிப்படுத்த நன்றி கூறி கேட்க வேண்டும். எதைச் சொன்னாலும் அனைத்தையும் ஆண்டவர் பெயரால் செய்து அவர் வழியாய் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் என்று புனித பவுல் கூறிகிறார் (கொலோ 3 : 17). நாம் கேட்டாலும், தட்டினாலும் தேடினாலும் அனைத்திற்கும் பதில் நம் விண்ணகத் தந்தையிடமிருந்தே வரவேண்டும். இதையே புனித யாக்கோபு நல்ல கொடைகள் அனைத்தும் நிறைவான வரமெல்லாம் ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன என்று குறிப்பிடுகிறார். ( யாக் 1:17) எனவே தான் தாவீது அரசர் மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன். எங்கிருந்து எனக்கு உதவி வரும்? விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்து எனக்கு உதவி வரும் என்கிறார் (திபா 121:1). நம் ஆண்டவர் தம் சீடர்களுக்குச் செபிக்கக் கற்றுக் கொடுக்கும் போது உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தை கேட்டால் தம் பிள்ளைகளுக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!

என்று உறுதிபட கூறிகிறார் (மத் 7:9 - 11). நாம் கேட்டாலும் தட்டினாலும் தேடினாலும், அனைத்தும் நம் விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன, என்பதை உறுதியாக நம்ப வேண்டும்; இவ்வாறு நாம் கேட்கும் போது கேட்போர் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படும் என்று ஆண்டவர் கூறுகிறார் (லூக் 11 : 10). இறுதியாக, நாம் எதைப்பற்றியும் கவலைப்படாமல் கேட்க வேண்டும். ஆனால், நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை தெரிவியுங்கள் அப்போது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும் என்று பவுல் குறிப்பிடுகிறார் (பிலி 4:6 -7) நாம் தந்தையாம் கடவுளிடம் நல்ல கொடைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு எத்துணை அருமையான ஆலோசனை என்பதை எண்ணிப் பார்ப்போம்; நன்றியோடு கூடிய இறைவேண்டல் தந்தையாம் கடவுளுக்கு மிகவும் விருப்பமானது. நன்றியோடு கூடிய இறைவேண்டலுக்கு நம் ஆண்டவர் இயேசு நமக்கு முன் மாதிரியாக உள்ளார். இறந்த இலாசரை உயிரித்தெழச் செய்வதற்கு முன் தந்தையே நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன் என்றார். (யோவா 11: 41). இவ்வாறு நாம் விண்ணகத் தந்தையின் திருவுளம் அறிந்து கேட்கும்போது அவரது அருள் கொடைகள் நம்மை அளவில்லாமல் நிரப்பும். இறையருள் பெறுவோரின் தொகைப் பெருகப் பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார் (2கொரி 4:15) இவ்வாறு நாம் கேட்பதிலும் தட்டுவதிலும் தேடுவதிலும் மகிழ்ச்சி கொள்வோம் நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான நம் விண்ணகத் தந்தையை எப்போதும் மாட்சிபடுத்துவோம் (எபே 3:20 - 21)

நற்பணி M. **விசுவாசம்**

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய் அமைதி அருள்பவரே, (எபே 2:14)இறைவா!

நீர் அருளும் அமைதி இவ்வுலகம் முழுவதும் நிலவிட (யோவா 14:27),நாடுகள், மொழிகள், இனங்கள் கடந்து ஒருவரை ஒருவர் அன்பு செய்யவும், பகைமைகளும், போர்களும் நீங்கிடவும் (திபா 146:9),நாடுகளை ஆள்பவர்கள் சுய நலம் நாடாமல் மக்களின் அமைதிக்காக உழைக்கும் மன நிலை தர வேண்டும் என்றும் அதற்காகத் தொடர்ந்து செபிக்கும் மன நிலையை எங்களுக்கும் தர வேண்டுமென்று (எபே 6:18) இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

நல்லுறவு மனித வாழ்க்கை நெறிகளில் மிக முக்கியமான பண்பாகும். எங்கு நல்லுறவு இல்லையோ அங்கு பகை வளர்ந்துகொண்டே இருக்கும். அங்கே, துன்பமும், துயரமும், இழப்பும், நஷ்டமும் ஏற்படும். பகைமையும், பிரிவினையும்தான் மனிதகுல உறவுகளைச் சீர்குலைக்க அலகை பயன்படுத்துகிற பயங்கரமான ஆயுதங்கள். உடைந்த உறவுகளால் உண்டாகும் உள்ளத்து வேதனையை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அது எல்லோமையும் துக்கப்படுத்தி விடுகிறது. முறிந்த உறவைச் செப்பனிடுவது எளிதான காரியமல்ல. ஆனாலும் முடியாததல்ல. அவைகளை வெற்றி கொள்ள நமது ஆண்டவர் கொடுத்த வல்லமையான ஆயுதமே நல்லுறவு. கடவுளே நல்லுறவுக்குச் சிறந்த மாதிரி. இறை மனித உறவில் ஏற்பட்ட முறிவின் கரணமாக நல்லுறவு பாதை அடைப்பட்டுப் போனது. பாவம் மனிதனைக் கடவுளிடமிருந்து பிரித்தது. ஆனாலும் உலக மனிதர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்து இயேசு மூலம் நல்லுறவுக்கான நற்செயல்களை மேற்கொண்டார். 1. மனித குலத்தை அன்பு செய்தார். 2. உறவுக்காக தன்னை தாழ்த்தினார். 3. உடைந்த உறவுகளை ஒன்று சேர்க்க பாடுகளை ஏற்றார். 4. அழைத்தார். 5. மனித குல குற்றங்களை மன்னித்தார் ஆகிய நற்செயல்கள் மூலம் உடைந்த உறவுகளை ஒன்றிணைத்தார். இவ்வாறாக நாமும் நற்செயல்களைச் செய்து நல்லுறவைப் பேண அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**நல்லுறவுக்கான நற்செயல்கள்:**

**1.அன்பு:** நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது (யோவா4:9,10). நாம் பாவிகளாய் இருந்த போதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார் (உரோ 5:8). தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் கடவுள் ஒப்புவித்தார் (உரோ8:32). ஏனெனில் அன்புதான் எல்லாவற்றிலும் தலைசிறந்தது. ஆகவே நாமும் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல செயல்பட வேண்டும். கிறிஸ்து நம்மீது அன்பு கூர்ந்ததுபோல நாமும் அன்பு கொண்டு வாழ வேண்டும் (எபே5:1-2). அன்பு செய்வது நல்லுறவுப் பாதையின் முதல் படியாகும்.

**2.தாழ்ச்சி:** இறை மனித உறவில் ஏற்பட்ட முறிவைச் சரி செய்ய மகனாகிய கடவுள் மனிதரானார். சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் (பிலி2:6-8). நல்லுறவை ஏற்படுத்த இந்த தாழ்ச்சி அவருக்கு அவசியமாயிற்று. எல்லா வல்லா இறைவனே இயேசு கிறிஸ்துவுக்குள் தம்மை தாழ்த்திக் கொண்டாரெனில் நாமும் தாழ்ந்துபோக கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே நல்லுறவுக்குத் தடையாக இருக்கிற ஆணவம், அகந்தை, செருக்கு, பெருமை, வீண்பேச்சு ஆகிய பண்புகளை நாம் அழித்தொழிக்க வேண்டும். நம்மை உறவாக்கிக்கொள்ள உயிரையே கொடுத்த இயேசு கிறிஸ்துவின் செயல்பாடுகளை எண்ணிப்பார்த்து (எசா53:2-7) அவர் கொண்டிருந்த மனநிலை நம் ஒவ்வொருவரிலும் உருவாக வேண்டும் (பிலி 2:5). நம்மையே தாழ்த்திக்கொள்வது நல்லுறவுப் பாதையின் இரண்டாவது படியாகும்.

**3.பாடுகள்:** பாடுகளினால் மட்டுமே குலைந்த உறவை சரிசெய்ய முடியும் என்று எண்ணிய கடவுள் அவ்விதமான பலியை செலுத்த திருவுளம் கொண்டு தம் ஒரே பேரான மகனை சாவுக்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவும் நம்மை கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார் (1பேது 3:18) கொடூரமான பாடுகள் என்பதை அறிந்திருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் தந்தையின் விருப்பத்திற்கு தன்னை முழுவதும் கையளித்தார். ' உலகின் பாவங்களுக்காக பாவமே அறியாத அவரை பாவநிலை ஏற்கச் செய்தார். தன்

மகன் பாடுகள் படவும் இறக்கவும் அதன் பொருட்டு நாம் நிலைவாழ்வு பெறவும் கடவுள் தாமே தேர்ந்துகொண்ட பாதை பாடுகள். பகைவர்களுக்காக பாடுகள் படுவது என்பது இயலாத ஒன்றுதான். ஆனாலும் நல்லுறவுக்கு இதுவே உகந்ததாக இருக்கிறது. அதேவேளையில் நாம் பொறுத்துக்கொள்ளும் எந்தப் பாடுகளும் இயேசுவின் பாடுகளுக்கு ஈடாக முடியாது. ஆனாலும் பாடுகளைப் பொறுத்துக்கொள்வதன் மூலமாகத்தான் நல்லுறவை உண்டாக்க முடியும். பாடுகள் நல்லுறவுப் பாதையின் மூன்றாவது படியாகும்.

**4.அழைத்தல்:** ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நாம் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து அவரது இரக்கத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறோம் (எபே 2:12.13). இது நம் செயல்களால் அல்ல. கடவுளின் அருள். ஆகவே 'உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால், நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்கு செவிசாய்தால் நல்லது. உங்கள் உறவு தொடரும். அழைத்துப் பேசியும் தீர்வு கிடைக்கவில்லையென்றால், இறைப்பற்றும் ஞானமும் உள்ள ஒன்றிரண்டு நபரின் உதவியை நாடலாம். அது நல்லுறவுக்கு உதவியாயிருக்கும் இன்னமும் தீர்வு கிடைக்காவிட்டால் திரு அவையிடம் கூறுங்கள் (மத் 18:5-7). இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு செயலையும் எண்ணிப்பார்த்து அவரைப்போலச் செயல்பட்டு அவரது மாட்சியில் பங்குபெறவே அழைக்கப் பட்டிருக்கிறோம். ஆகையால், நம்மீது எந்த குற்றமும் இல்லையென்றாலும், பிறரை அழைத்துப்பேசி நல்லுறவை ஏற்படுத்த முன்வரவேண்டும். நம்முடைய திறந்த மனதை முதலில் வெளிப்படுத்த வேண்டும். நல்லுறவை ஏற்படுத்த எந்த தியாகத்திற்கும் தயாராக செய்ய வேண்டும். இப்படியாக, முறிந்துபோன உறவை சரிசெய்து கொள்ளாவிடில் பிரச்சினை பெரிதாகிவிடும். ஆக 'அழைத்துப் பேசுதல்' நல்லுறவுப் பாதையின் நான்காவது படியாகும்.

**5.மன்னிப்பு:** நாம் பாவம் செய்து தண்டனைக்குரியவர்களாய் இருந்தோம். கடவுளோ! நம்மை மன்னித்து தம்மோடு சேர்த்துக்கொள்ள விரும்பினார். கடவுள் நம்மை கிறிஸ்து வழியாக மன்னித்தது போல நாமும் ஒருவரை ஒருவர் மன்னிக்க கடமைப்பட்டிருக்கிறோம் (எபே 4:32). உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் மன்னிக்க மாட்டார்(மத் 18:35). ஆகையால், ஒருவர் ஒரே நாளில் அவர் ஏழுமுறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழுமுறையும் உங்களிடம் திரும்பி வந்து நான் மனம் மாறிவிட்டேன் என்று சொல்வாரானால் அவரை மன்னித்துவிடுங்கள் (லூக் 17:4). இது மிகவும் கடினம்தான். ஆனால், இச்சவாலை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உறவுகளைச் சீர்செய்ய முடியாது. ஆகவே எந்தளவுக்கு பிறருடைய குற்றங்களை மன்னிக்கிறோமோ, அதே அளவுக்கு நமக்கும் மன்னிக்கப்படும். ஏனென்றால், 'எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல. எங்கள் குற்றங்களை மன்னியும்' என்று ஒவ்வொரு நாளும் கடவுளிடம் வேண்டுகிறோம். இதை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும். ஏனென்றால் மன்னிப்பு நல்லுறவுக்கான சிறந்த பாதையாகும்.

இவ்வாறு நாமும் கடவுளின் மாதிரிகையைப் பன்பற்றி நற்செயல்கள் புரிவதெற்கென்றே இயேசு கிறிஸ்து வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே மன உறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சி. மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு அவர் நிலை வாழ்வை வழங்குவார் என்பது உறுதி. (எபே 2:10. உரோ 2:7). ஏனென்றால் கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கி கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம் (1பேது 3:9). ஆகவே நல்லுறவு நம் பாதையாகவும் நற்செயல் நம் வாழ்வாகவும் அமையட்டும்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16).

நம்பிக்கை என்ற தூய ஆவியாரின் கொடை பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். நாம் கொண்டிருக்கும் இறை நம்பிக்கை நம்முடைய உலக வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் வெற்றியோடு பயணிக்க எவ்வாறு உறுதுணையாக இருக்கின்றது என்று தொடர்ந்து பல விதமான பரிமாணங்களில் தியானித்து வந்திருக்கின்றோம்.

ஆண்டவர் இயேசுவும் அவருடைய சீடர்களாகிய நம்மிடம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கின்ற உள்ளத்தையே விரும்புகின்றார்; எதிர்பார்க்கின்றார். 'மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?' (லூக்18:8). நமக்காக மனிதனாகப் பிறந்து, சிலுவைச் சாவை ஏற்றுக் கொண்டு இறந்து, உயிர்த்து, விண்ணகம் சென்று தந்தையின் வலப்பக்கத்தில் நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கின்ற இயேசு ஆண்டவர் மீண்டும் உலகிற்கு வரும் போது நம்பிக்கையை மனிதர்களிடம் காண முடியுமா?என்று ஏக்கத்தோடு வேதனையோடு கேட்கின்றார்.

இயேசு நம்பிக்கை கொண்டவர்களைப் பாராட்டியதையும், நம்பிக்கை இல்லாதவர்களைக் கடிந்து கொண்டதையும், நம்பிக்கை கொள்ள அறிவுறுத்தியதையும், நம்பிக்கை கொள்ள செபித்ததையும் நாம் விவிலியத்தில் வாசிக்கின்றோம். 'இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை' (மத்8:10) என்று நூற்றுவர் தலைவனையும், 'அம்மா உன் நம்பிக்கை பெரிது' (மத்15:28) என்று கனானியப் பெண்ணையும் பாராட்டினார். கடவுள் நம்மிடம் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் நாம் அவரிடம் கொண்டிருக்கின்ற நம்பிக்கையையும் உறவையும் மட்டுமே.

நம்பிக்கையின்மையைக் கண்டு ஆண்டவர் இயேசு கடிந்து கொள்கிறார். 'நம்பிக்கை குன்றியவர்களே ஏன் அஞ்சுகிறீர்கள்' (மத்8:26) என்று படகில் பயணித்த சீடர்களையும், 'நம்பிக்கை,குன்றியவர்களே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்கு இவ்வாறு அணி செய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் அதிகமாய் செய்ய மாட்டாரா?' (மத்6:30) என்று கவலைப்படுகிறவர்களையும் கடிந்து கொள்கின்றார். நம்பிக்கை இல்லாத மக்களைப் பார்த்து 'நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே' (மத்17:17) என்று இயேசு கடுமையாகக் கடிந்து கொள்கிறார். நாம் நம்பிக்கை அற்றவர்களாய் வாழும் போது நம்மையும் பார்த்து இயேசு சீரழிந்த தலைமுறையினரே என்று கடுமையாகக் கடிந்து கொள்வார்.

நம்பிக்கையோடு வாழ வேண்டும் என்பதை இயேசு அறிவுறுத்தி இருப்பதையும் நாம் விவிலியத்தில் காண்கின்றோம். ஆண்டவர் புனித தோமாவிடம் 'ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்' (20:27)என்று நம்பிக்கை கொள்ள வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்துகின்றார். நாம் நம்பிக்கை இழந்தவர்களாக வாழும் போது நம்மைக் காண்கிறவராக இருக்கின்ற இயேசு ஆண்டவர் நமது நம்பிக்கை தளராதிருக்க நமக்காகத் தந்தையிடம் மன்றாடுகிறவராகவும் இருக்கின்றார். ' நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்'. (லூக் 22:32)என்று புனித பேதுருவிடம் இயேசு தான் காட்டிக் கொடுக்க இருந்த அந்த இரவில் கூறிகிறார்.

அவரைக் கண்ணால் காணாமல் அவரை உள்ளத்தால் உணர்ந்து நம்புகிற நம்மைப் பார்த்து காணாமல் நம்புவோர் பேறு பெற்றோர் என்று இயேசு

பாராட்டுவதை அறிந்து கொள்வோம். நாம் நம்பிக்கையில் உறுதி பெற்றிருந்தால் தான் நம்பிக்கையில் தளர்ந்து போயிருக்கின்ற பிறரை உறுதிப்படுத்த முடியும். நாம் படித்ததைப் பிறருக்கு சொல்வதற்கும் நாம் அனுபவித்ததைப் பிறருக்குச் சொல்வதற்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது. 'நம்பிக்கையால் தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றார்கள்'(எபி11:2,39). நாம் வாழும் சமூகத்திற்கு முன்பாகவும் கடவுளுக்கு முன்பாகவும் நற்சான்று பெற்றவர்களாய் வாழ வேண்டுமென்றால், நமது நம்பிக்கையில் நாம் உறுதி பெற்றிருக்க வேண்டும்.

'நீங்களே என் சாட்சிகள்' (எசா43:13,44:8) என்று ஏசாயா இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் உரைத்ததை நினைவு கூறுவோம். நாம் நமது நம்பிக்கையின் மூலம் ஆண்டவரின் சாட்சிகளாய் வாழ்வோம். எபிரேயருக்கு எழுதிய திருமுகம் பதினோராம் அதிகாரம் முழுவதையும் வாசித்துத் தியானிப்போம். அதன் மூலம் நம் மூதாதையர்களின் நம்பிக்கை வாழ்வை நாமும் உள்வாங்குவோம். அதை நமது நம்பிக்கை வாழ்வின் பாதைக்கு விளக்காகவும் வெளிச்சமாகவும் எடுத்துக் கொள்வோம். நம்மிடம் உள்ள நம்பிக்கையைக் கண்டு நன்று நன்று நல்ல பணியாளரே என்று இயேசு ஆண்டவரால் பாராட்டுப் பெறுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

# இறைத் திருவுளம்


கடவுள் படைத்தவற்றில் தலை சிறந்த படைப்பு மனிதன். ஏனென்றால், மனிதனை தன் சாயலிலும் உருவிலும் படைத்தார்(தொநூ 1:26). மனிதன் சிதறுண்டு போனபோது தங்களுக்கென்ன தெய்வங்களை உருவாக்கினர். ஆனால் கடவுள் அவர்களிடமிருந்து தனக்கென ஒரு இனத்தை தேர்ந்தெடுத்து அவர்களை ஆசீர்வதித்து பலுகச் செய்தார். தான் தேர்ந்தெடுத்த இஸ்ராயேல் மக்கள் தனக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று விரும்பி மோசே வழியாகக் கட்டளைகளையும், சட்டங்களையும் கொடுத்தார். ஆனால் இஸ்ராயேல் மக்களோ அவர் தந்த விதிமுறைகளைத் தங்கள் வசதிக்கேற்ப வளைத்துக் கொண்டனர். அதன் விளைவாக பாவமும் தண்டனையும் நுழைந்தன. மனிதர்கள் தங்கள் வாழ்வை தம் விருப்பப்படி வாழ்ந்தாலும் பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்தி கடவுளை தங்கள் வயப்படுத்தலாம் என்று கருதினர். ஆனால் காணிக்கைகளிலும் எரிபலியிலும் மயங்குபவர் அல்ல நம் கடவுள். கடவுளுக்கு பிரியமான வாழ்வு வாழ்ந்த தாவீது உம் திருவுளத்தை நிறைவேற்ற எனக்கு கற்பித்தருளும்(திபா 143:10) என்றும் நான் நடக்க வேண்டிய வழியை காட்டியருளும் (திபா 143:8) என்று செபிக்கிறார். கடவுளின் இரக்கத்தைப் பெற அவர் திருவுளத்தை நிறைவேற்றுதல் இன்றியமையாதது என்பதை அறிந்திருந்ததால் அவரது இறைவேண்டல் இப்படி அமைந்தது. இயேசு மனுவுரு எடுத்து மண்ணுலகில் பணியாற்றிய போது தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதை தனது முதன்மை கடமையாக கருதினார் (மத் 18:14; யோவா 6:39). அதற்காக செபித்தார் (மத் 6:10).

கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார் (மாத் 3:35) என்று கூறி இறை திருவுளத்தை நிறைவேற்றுபவரை தனது உறவினர்களாகக் கருதினார். இறை திருவுளத்தை நிறைவேற்ற அந்த திருவுளத்தை அறிதல் வேண்டும். அதற்கு ஒரே ஒரு நிபந்தனை உலகப் போக்கின்படி வாழக்கூடாது(உரோ 12:2). எனவே இயேசுவைப் போல உலக போக்கினைத் தவிர்த்து இறை திருவுளம் அறிந்து சீடத்துவ வாழ்வைத் தொடர்போம்.

நற்பணி M.**லூயிஸ் ஜான் போஸ்கோ**

# பணியாளர் குறுக்கெழுத்துப் போட்டி (05)

ஆகஸ்ட் மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் (விடுதலைக்கு இட்டுச் செல்லும் சீடத்துவம் ) இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்பட்டுள்ளது




## இடமிருந்து வலம்

2 நற்செய்தியை பறைசாற்ற தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் யார்?

4 அனைத்திலும் வஞ்சகம் மிக்கது எது?

6 சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது எது?

8 ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மீது சுமத்தாதேயும் என்று கூறி உயிர்விட்டவர் யார்?

10 யாருடைய நிழல் நம்மோடு இருந்து நம்மை தேற்றும்?

12 சரியான கேள்வி சரியான பதிலுக்கான திறக்கிறது.

14 என்னே! இறைவார்த்தைக்குரிய

## மேலிருந்து கீழ்

1 இயேசுவின் அன்பின் மிக முக்கியமான பரிமாணம் எது?

3 ஆண்டவர் தூண்டுவதால் நமக்காகச் செயல்படுகிறவர்கள் யார்?

5 மனிதர்கள் யாருக்கு உரியவர்கள்?

7 பாவி எந்த மனம் மாறலாம்.

9 உரோம் நகரின் துறைமுகம் எது?

11 சுவர் பக்கமாய் முகத்தைத் திருப்பி கொண்டு ஆண்டவரை நோக்கி கதறியழுதவர் யார்?

13 நீ நடக்க வேண்டிய உனக்குக் காட்டுவேன்.

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்
3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 16 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி லூவானா செபஸ்தியான், கரோலின், **தங்கச்சிமடம்.** நற்பணி பாத்திமா ராணி, **ம.மிக்கேல்பட்டணம்.** சகோ. செலின்பிரபா, **அமைதியகம்.** நற்பணி மலர், **பு.முத்துச்செல்லபரம்.** நற்பணி மரிய கிரகோரி, **ஓ.சிறுவயல்.**நற்பணி கரோலின், கரோலின் எமிலி, **பரமக்குடி**

**குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்:** நற்பணி **மலர், பு.முத்துச்செல்லபுரம்**

*அனைவருக்கும் வாழ்த்துகள்.*



## திருவிவிலியமும் திருக்குறளும்

ஊசு என்ற நாட்டில் வாழ்ந்த யோபு மிகவும் செல்வந்தராய் வாழ்ந்ததோடு ஆண்டவருக்கு அஞ்சி தீயதை விளக்கி நேர்மையாளராய் விளங்கினார். மேலும் கடவுளுக்கு மிகவும் ஏற்புடையவராய் நீதிமானாய் எல்லோரிலும் மிகப்பெரியவராய் திகழ்ந்தார். இச்சூழலில் கடவுள் அனுமதியுடன் சாத்தான் யோபுவை சோதனைக்கு உள்ளாக்கி யோபுவின் பிள்ளைகளையும், கால்நடைகளையும், எல்லா உடைமைகளையும் அழித்ததோடு யோபுவையும் வியாதியால் உருக்குலையச் செய்தான். ஆனால் யோபு ஆண்டவர் மீது கொண்ட பற்றுறுதியில் தளராது வாழ்ந்தார் (யோபு 1:21). சொல்லொண்ணா துன்பமடைந்த யோபு கடைசி வரை கடவுளுக்கு ஏற்புடையவராய் வாழ்ந்து மீண்டும் கடவுளின் ஆசிரை பெற்று இழந்த அனைத்தையும் இரட்டிப்பாக பெற்றார்.

மேற்கண்ட உண்மையை விளக்கிக் கூற திருக்குறளில் இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தில் 623 வது குறள் உள்ளது.

இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
இடும்பை படாஅ தவர்

துன்பம் சூழும் போது துவண்டு போகாதவர்கள் அத்துன்பத்தையே துன்பத்தில் ஆழ்த்தி அதனை தோல்வியுற செய்வார்கள். தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர் இவ்வுலகில் தம் வாழ்வை பொருட்டாக கருதாதோர் நிலை வாழ்வுக்கு தம்மை உரியவராக்குவர். (யோவா 12:25) இந்த இறை வார்த்தையின் வழி நின்று வாழ்ந்த யோபுவை போல நாமும் வாழ முயல்வோம்.

- நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

# ஆசிர்

ஆசிர் என்றால் என்ன? ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு துன்பம் ஏற்படுமா? நான் கடவுளை உண்மையாக அன்பு செய்கிறேன், அப்படியானால் ஏன் எனக்கு இவ்வளவு பிரச்சனைகள்? என்று எண்ணுகிறோம். ஆனால் திரு விவிலியம் வேறொரு உண்மையை நமக்கு உரக்கச் சொல்கிறது.

உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு எனினும் துணிவுடன் இருங்கள் நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன். (யோவா 16:33) இயேசு தம்மை பின்பற்றுகிறவர்களுக்குத் துன்பமே வராது என்று சொல்லவில்லை, துன்பம் உண்டு என்றார். ஆனால் அதற்குப் பிறகு துணிவுடன் இருங்கள் என்றார். ஏனென்றால் துன்பத்தை விட நம்மோடு இருப்பவர் பெரியவர் நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும் தான். நாங்கள் ஆறுதல் பெறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவே (கொரி 1:6) என்கிறார் புனித பவுல். ஆசிர் என்பது துன்பம் இல்லாத வாழ்க்கை அல்ல துன்பத்தின் நடுவிலும் கடவுள் நம்மோடு இருந்து நம்மைத் தாங்குகிறார், தேற்றுகிறார், உருவாக்குகிறார். நம்மைப் பயன்படுத்தி அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிறார் என்று நம்புவது. இறைவாக்கினார் எரேமியா ஆசீர் பெற்றவராய் வாழ்ந்தார். தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலை படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன் (எரே 1 :5). அழைக்கப்பட்டதால் அவருடைய வாழ்க்கை எளிதாக மாறவில்லை. அதிகம் துன்பப்பட்ட இறைவாக்கினார் இவர்தான் அடிக்கப்பட்டார் (எரே 20:2) இறைவனை சுருள் எரிக்கப்பட்டது. சேற்று குழியில் போடப்பட்டார் தனிமையையும் ஆழமான மன வேதனையையும் அனுபவித்தார். அழுகிற இறைவாக்கினர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. புலம்பல் நூலை எழுதியவரும் இவரே. ஆனால் கடவுள் அவரிடம் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன் (எரே 1 :19) என்றார். கடவுளால் அழைக்கப்பட்டவர் என்பதற்கான அடையாளம் துன்பமில்லாத வாழ்க்கை அல்ல துன்பத்திலும் கடவுள் நம்மோடு இருப்பதை உணர்ந்து அவரை பற்றிப் பிடித்து வாழ்வது.

யோபு ஆசீர்வதிக்கப்பட்டவர். கடவுளுக்கு பயந்து வாழ்ந்த மனிதர். அவர் மாசற்றவரும் நேர்மையானவருமாய் இருந்தார். கடவுளுக்கு அஞ்சி தீயதை விளக்கி வந்தார் (யோபு 1 : 1) ஆனால் அவர் அனைத்தையும் இழந்த நிலையிலும் ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக் கொண்டார், ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக. (யோபு 1 : 21) என்றார். இறுதியில் கடவுள் யோபுக்கு இருந்தனவற்றை எல்லாம் இரண்டு மடங்கு ஆக்கினார் (யோபு 42:10). துன்பம் நம்முடைய முடிவு அல்ல துன்பத்திற்கும் ஒரு எல்லை உண்டு. எனினும் துணிவுடன் அவரை நம்பினால் அவரது மாட்சியை காணலாம் (யோவா 11:40).

யோசேப்புக்கு கடவுள் ஒரு எதிர்காலத்தை வெளிப்படுத்தினார் ஆனால் அந்த ஆசீர் உடனடியாக வெளிப்படவில்லை. திருவிவிலியம் சொல்கிறது

ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார் சிறை சென்றாலும் ஆண்டவர் யோசேப்புடன் இருந்து அவரை பராமரித்தார். கடவுள் அவருடன் இருந்தார். இருந்த போதும் அவர் அனைத்து துன்பங்களையும் எதிர்கொண்டார். கடவுளின் கட்டளையை மீறவில்லை; அவரை வெறுக்கவும் இல்லை. இறுதியில் சிறை வாயிலின் வழியாய் அரண்மனையை அடைந்தார் பஞ்சத்திலிருந்து அனைவரையும் காப்பாற்றினார்.

பவுல் மிகப்பெரிய திருத்தூதர்களில் ஒருவர் இயேசு நேரடியாக அவரிடம் பேசினார் இறை அனுபவம் பெற்ற அவர் தான் சந்தித்த துன்பங்களை பட்டியலிடுகிறார். (1கொரி 11:24:27)

இயேசுவுக்காக பணியாற்றிய போது அதிகமான துன்பங்களை சந்தித்தார். ஆனால் அவர் நாங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனமுடைந்து போவதில்லை குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை (2 கொரி 4:8) என்றார். துன்பம் வந்ததால் கடவுள் நம்மை கைவிட்டு விட்டார் என்று பொருள் அல்ல சில நேரங்களில் நாம் கடவுளுடைய பணியை செய்வதாலேயே துன்பத்தை எதிர்கொள்கிறோம்.

அப்படியானால் கடவுளின் ஆசிரால் நமக்கு கிடைக்கும் பலன் துன்பமில்லாத வாழ்க்கையை அல்ல மாறாக துன்பத்திலும் அவரது உடன் இருப்பை அனுபவித்தலாகும். பவுல் தன்னுடைய முள் அகற்றப்பட வேண்டும் என்று மூன்று முறை கேட்டார் கடவுளுடைய பதில் என் அருள் உனக்கு போதும் (2 கொரி 12:9) இதுவே கடவுள் தரும் ஆசீர்.

ஆசிர் என்பது கண்ணீர் இல்லாத வாழ்க்கை அல்ல, மாறாக கண்ணீரைத் துடைக்கிற கடவுளுடைய கரம். நம்மோடு இருப்பதை உணர்தலாகும். சிலுவை இல்லாத வாழ்க்கை அல்ல, மாறாக சிலுவைக்குப் பின்னால் வரும் உயிர்ப்பு அனுபவமாகும்.

கடவுளிடம் அன்பு கூறுபவர்களோடு அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் (உரோ 8 : 28)என்பது எவ்வளவு உண்மை.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.



## இது சாத்தியமா?

ஆண்டவர், தகுதியற்ற என்னைக்கூட நற்செய்தி அறிவிப்புப் பணியில், குறிப்பாக இல்ல சந்திப்புப்பணி மற்றும் புதிய பணியாளர்கள் உருவாக்கப்பணி போன்ற பணிகளில் பயன்படுத்துகிறார் என்று எண்ணும்போது ஆண்டவருக்கு நன்றி செலுத்தி அகமகிழ்கிறேன்.

புதிய பணியாளர்கள் பயிற்சியின்போது நான் கற்றுக்கொடுக்கத்தான் போகிறேன் என்று சொல்வதைவிட, என்னுடன் வருகின்ற உடன் பணியாளர்களிடமிருந்து பல காரியங்களைக் கற்றுக் கொள்கிறேன் என்பதுதான் உண்மை. ஆண்டவருக்கு நன்றி.

'இவ்வுலகில் உங்கள் தலைவர்களாக இருப்பவர்களுக்கு அச்சத்தோடும், நடுக்கத்தோடும், முழுமனத்தோடும் கீழ்ப்படியுங்கள்' (எபே5:6) என்ற இறைவார்த்தைக்கிணங்க, பணிக்குழு ஆவியரால் இயக்கப்படுகிற போது பொறுப்பாளர்களுக்குக் கீழ்படிந்து, அவர்கள் அனுப்புகிற இடங்களுக்குச்சென்று, ஆண்டவர் விரும்பும் நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்யும் போது பிறரிடமிருந்து நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்வது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

## செப்டம்பர் 2026 தஞ்சை மறைமாவட்ட பணியாளர்கள் பயிற்சி செப்டம்பர்— 2026 சிறப்புப் பயிற்சிகள்

| நாள் | நிகழ்வு | நெறியார்கள் |
|---|---|---|
| 12&13 .9.26 | அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி M. மரிய கிரகோரி 9486965799 செயலர் 9787967272 |
| 13.9.26 | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி GMS. ராணி 9655264448 |
| 13.9.26 | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 13.9.26 | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 13.9.26 | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 |
| 13.9.26 | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி J. ஆரோக்கியசாமி 9443157260 |
| 13.9.26 | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் | நற்பணி A. தனிநாயகம் 9486037889 |
| 13.9.26 | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி V. செங்கோல்மேரி 9345807125 |

## ஆண்டுத் தியானம் — 2026

| நாள் | | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | அக்டோபர் 26 **09/10&11** | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி M.சேவியர்<br>நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல் |
| 2. | அக்டோபர் 26 **23/24&25** | அமல அன்னை அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி I.செபஸ்தியான்<br>நற்பணி A.சகாயலூயி |
| 3. | நவம்பர் 26 **20/21&22** | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி GMS.ராணி<br>நற்பணி S.ஸ்தனிஸ்லாஸ் |
| 4. | நவம்பர் 26 **27/28&29** | அமல அன்னை அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி J.அருள் இளங்கோ<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 5. | டிசம்பர் 26 **04/05&06** | அமல அன்னை அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB<br>Sr. **விமலா** ISONE | நற்பணி L.ஆரோக்கியசாமி<br>நற்பணி A.R.சூசைராஜ் |

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 2.9.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 5.9.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 6.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், காளையார்கோவில், |
| 6.9.26 | நற்செய்தி அறிவுப்புக் பணிக்குழு சிறப்புக் கூடுகை | அருங்கொடை இல்லம். திருச்சி |
| 12.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், மாந்தை |
| 12&13 .9.26 | தெளிந்து தேர்தல் தியானம் | திருமயம் |
| 13.09.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | சிவகங்கை, ஓரியூர், தரங்கம்பாடி, மணல்மேல்குடி, |
| 13.9.26 | தஞ்சை பணியாளர்கள் சிறப்புப் பயிற்சி | கோட்டைக்காடு, புதுக்கோட்டை, பூதலூர்,பட்டுக்கோட்டை,அம்மாபேட்டை, திருவாரூர், நமணசமுத்திரம் |
| 19.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அண்ணாநகர்-தஞ்சை, மங்களபுரம் |
| 20.9.26 | தொடர் களப்பணி | இராம்நகர், நானாக்குடி, காரங்காடு கமுதி, கீழ உச்சாணி, செங்குடி, சாயல்குடி பங்குகள். |
| 20.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமைதியகம். சி.கே. மங்கலம், சாயல்குடி மன்னார்குடி, அறந்தாங்கி, தஞ்சாவூர் பேராலயம். |
| 24&25 09.26 | அர்ப்பணம் ஏற்போருக்கு தெளிந்து தேர்தல் தியானம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 26.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | நாகப்பட்டிணம் |
| 27.9.26 | அர்ப்பண விழா | புனித காணிக்கை மாதா கோவில், முத்துப் பேட்டை |
| 27.9.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | ஆர்.எஸ்.மங்கலம், எருக்கூர், சீர்காழி. மயிலாடுதுறை |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 06.09.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| 06.0.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி C. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 12.09.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 13.9.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி A. யூஜின் அமலராஜ் |
| 13.09.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 20.09.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. பால்ராஜ் |
| 20.09.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி GMS. ராணி<br>நற்பணி J. சார்லஸ்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 20.09.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 27.09.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி P. சகாயராணி<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப?**

-எல்லாரோ

இருப்பதை **அன்பு** செய்யப் பழகிக்கொள்வோம்.
இல்லாததைப் பற்றிய **கவலை** காணாமல் போகும்.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும்; வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். பிலிப்பியர் 4:12

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்குச் சமம்;
பொல்லாரின் எண்ணங்களோ பதருக்குச் சமம்.

**நீதிமொழிகள் 10:20**

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 12.09.26 | திரு இருதய ஆண்டவர் கோவில். மாந்தை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 |
| 13.09.26<br>III | புனித ஜெபமாலை அன்னை கோவில். தரங்கம்பாடி | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 |
| 13.09.26<br>II | புனித ஆரோக்கியமாதா கோவில். மணல்மேல்குடி | நற்பணி M. விசுவாசம் 9442758641<br>நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ 9443503618 |
| 19.09.26 | புனித செபஸ்தியார் கோவில் அண்ணாநகர். தஞ்சை | நற்பணி I. ஆரோக்கியசாமி 9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி(செக்காலை) 9843323439 |
| 19.09.26 | புனித லூர்துஅன்னை கோவில். மாங்களபுரம் | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி I. செபஸ்தியான் 7339576282 |
| 20.09.26<br>III | புனித சூசையப்பர் கோவில். மன்னார்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717 |
| 20.09.26<br>III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762<br>நற்பணி தை.அமல்ராஜ் 9443983519 |
| 20.09.26<br>III | கிறிஸ்து அரசர் கோவில் அறந்தாங்கி | செயலர் 9787967272<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 26.09.26 | புனித லூர்து மாதா கோவில் நாகப்பட்டிணம் | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717 |
| 27.09.26<br>IV | புனித சிந்தாத்திரி மாதா கோவில், எருக்கூர் | நற்பணி S. அந்தோணிபிரகாஷ் 9787791869<br>நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717 |
| 27.09.26<br>IV | புனித லூர்துமாதா கோவில் சீர்காழி | நற்பணி J. அருள் இளங்கோ 8842434307<br>நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ 9443503618 |
| 27.09.26<br>IV | புனித சவேரியார் கோவில் மயிலாடுதுறை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |

# புனித பெரிய கிரகோரி (செப்டம்பர் 3)



கி.பி 540. இல் பிறந்த புனித பெரிய கிரகோரியாரின் தந்தை திருச்சபைக்கு நெருங்கிய தொடர்புகளுள்ள 'பேட்ரிஷியன்' குடும்பத்தில் பிறந்தவர். ரோம் நகரின் நிர்வாக அலுவலராகவும் இருந்துள்ளார். கிரகோரியின் தாயார் 'சில்வியா' ஆவார்.

கல்வியில் சிறந்த கிரகோரி, இலக்கணம், அணியிலக்கணம், அறிவியல், சட்டம், சரித்திரம், கணிதம், சங்கீதம் ஆகியவற்றில் சிறப்பாக தேர்வு பெற்றார்.

590ஆம் ஆண்டு திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் பெரிய கிரகோரி என்று இலக்கிய படைப்புகளை வெளியிட்டார். உரோம் நகரில் வாழ்ந்த, பிற மதத்தினரை பெரும் எண்ணிக்கையில் மனமாற்றம் செய்தார். இவர் கிறிஸ்தவ வழிபாட்டினை சீரமைத்து ஒழுங்கு படுத்தியதால் இடைக்காலம் முழுவதும் இவர் கிறிஸ்தவ வழிபாட்டின் தந்தை என அழைக்கப்பட்டார்.

துறவற மடங்களில் வாழ்ந்த அனுபவமுடைய திருத்தந்தை இவர். இவர் மறைவல்லுநராகவும் கருதப்படுகின்றார். கத்தோலிக்க திரு அவையை கடந்து, பிரிந்த மற்ற திரு அவைகளும் புனிதராக ஏற்கப்படுகின்றார். சீர்திருத்தத் திருச் அவையைச் சேர்ந்த 'ஜான் கேல்வின் ' இவரைப் பற்றிக் கூறும்போது, இவரே கடைசியாக இருந்த நல்ல திருத்தந்தை எனக்கூறுகின்றார்.

கிரகோரியின் தந்தையின் மரணத்திற்கு பின், இவர் தமது குடும்ப இல்லத்தை துறவற மடமாக மாற்றி, அதனை புனிதர் ஆண்ட்ரூசுக்கு அர்ப்பணித்தார். (கிரகோரியின் மரணத்தின் பின்னர், அது புனித கிரகோரி மேக்னோ அல் செலியோ' என்று மறு அர்ப்பணம் செய்யப்பட்டது.)

இவர் துறவற மடத்தில் வாழ்ந்தபோது ஒருமுறை துறவி ஒருவர் நோய்வாய் பட்டு படுக்கையிலிருந்தார். தாம் முன்னர் ஒருமுறை, மூன்று தங்கத் துண்டுகளை திருடிய குற்றத்துக்காக பாவமன்னிப்பு வேண்டினார். கிரகோரியோ, அந்த துறவியை தனிமைப்படுத்தி இறந்த பின் அவரது உடலையும் அவர் திருடிய தங்கக்காசுகளையும் உன் காசுகளை எடுத்துக்கொண்டு நரகத்துக்கு கொண்டுபோ என்று செல்லி உரக்குவியலில் எறியச் செய்தார். இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள், தூய்மையான வாழ்க்கை வாழவேண்டுமென்று கடுமையாக நடந்து கொண்டார். இருப்பினும் அவரது ஆன்மா இளைப்பாற்றிக்காக 30 திருப்பலிகளை இவரே நிறைவேற்றினார். இவர் இறந்தபின் தூய பேதுருவின் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

இவர் இசையமைப்பாளர்கள், பாடகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பாதுகாவலராக விளங்குகிறார்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




'ஆலோசனை (Counselling) என்பது ஒருவருக்கு அறிவுரை கூறுவது மட்டுமல்ல; அவர் தனது எண்ணங்கள், உணர்வுகள், உறவுகள், சிக்கல்கள் மற்றும் வாழ்க்கைத் தேர்வுகளை ஆழமாகப் புரிந்துகொண்டு, தன்னுடைய தீர்வுகளைத் தானே கண்டறிய உதவும் ஒரு மனிதநேயத் தொடர்பு செயல்முறை ஆகும்.

ஒரு திறமையான ஆலோசகர் வெறுமனே "நன்றாகக் கேட்பவர்" ஆக இருப்பது போதாது. அவர் கேட்பதையும், புரிந்துகொள்வதையும், கேள்வி கேட்பதையும், உணர்வுகளை பிரதிபலிப்பதையும், சுருக்குவதையும், இலக்குகளை உருவாக்குவதையும், மாற்றத்தை ஊக்குவிப்பதையும் ஒருங்கிணைக்க வேண்டும். இவ்வாறு பல நுண்திறன்களை ஒரே ஆலோசனைச் செயல்முறையில் இணைத்துப் பயன்படுத்தும் திறன்களே "பேர்திறன்கள்" (Macro Skills) எனப்படுகின்றன.

1. Micro Skills-**இலிருந்து** Macro Skills-**க்கு**

ஆலோசனையின் Micro Skills என்பது ஆலோசகர் பயன்படுத்தும் தனித்தனி தொடர்புத் திறன்கள். உதாரணமாக:

- கவனமாகக் கேட்பது
- திறந்தநிலை வினாக்கள் கேட்பது
- பிரதிபலித்தல் (Reflection)
- தெளிவுபடுத்துதல் (Clarification)
- உணர்வுகளை அடையாளம் காணுதல்
- சுருக்கம் செய்தல்
- மௌனத்தைப் பயன்படுத்துதல்

இவை ஒவ்வொன்றும் தனித்தனி கருவிகள்.

ஆனால் உண்மையான ஆலோசனைச் சூழலில் இத்திறன்கள் தனித்தனியாக இயங்குவதில்லை. அவை ஒன்றோடொன்று இணைந்து ஒரு முழுமையான ஆலோசனைப் பயணத்தை உருவாக்குகின்றன. இந்த ஒருங்கிணைந்த பயன்பாடே Macro Skills.

Micro Skills = தனித்தனி கருவிகள்.

Macro Skills = அந்தக் கருவிகளை சரியான நேரத்தில், சரியான முறையில் ஒருங்கிணைத்து பயன்படுத்தும் திறன்.

2. Macro Skills **என்றால் என்ன?**

Macro Skills என்பது ஆலோசனைச் செயல்முறையின் பெரிய கட்டங்களை நிர்வகிக்க ஆலோசகர் பயன்படுத்தும் ஒருங்கிணைந்த திறன்களாகும்.

எளிமையாகச் சொன்னால்:

"எதை எப்போது கேட்க வேண்டும்?" என்பதைக் காட்டிலும், "ஒரு நபரை எங்கிருந்து எங்கு அழைத்துச் செல்ல வேண்டும்?" என்பதை அறியும் திறனே Macro Skill.

இது ஆலோசகரின் தொடர்புத் திறன் + கேட்கும் திறன் + உணர்வு புரிதல் + சிந்தனைத் திறன் + தொழில்முறைத் தீர்மானம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாகும்.

3. Macro Skills **ஏன் முக்கியம்?**

ஒரு ஆலோசனை அமர்வு வெறும் கேள்வி—பதில் நிகழ்வாக மாறிவிட்டால், அது ஆழமான மாற்றத்தை உருவாக்க முடியாது.

உதாரணமாக, ஒரு மாணவி: "எனக்கு படிப்பில் ஆர்வமே இல்லை. எல்லாமே தோல்வியாகத் தெரிகிறது" என்று கூறுகிறாள் எனக் கருதுவோம்.

**திறமையற்ற அணுகுமுறை:**

"நன்றாகப் படி. தினமும் ஒரு நேர அட்டவணை போடு."

இது அறிவுரை. ஆனால் பிரச்சினையின் ஆழத்தைத் தொடுவதில்லை.

Macro Skills பயன்படுத்தும் ஆலோசகர் முதலில் கேட்பார்:

"படிப்பில் ஆர்வம் குறைந்தது எப்போது முதல் என்று நீங்கள் உணர்கிறீர்கள்?"

பின்னர்:

"அந்தக் காலத்தில் உங்கள் வாழ்க்கையில் வேறு ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா?"

அதன்பின் அவளுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பார்:

"நீங்கள் முயற்சி செய்தும் எதிர்பார்த்த முடிவு கிடைக்காததால், 'நான் முடியாது' என்ற எண்ணம் உங்களுக்குள் வலுப்பெற்றிருக்கிறது போலத் தெரிகிறது."

இவ்வாறு கேட்பது → ஆராய்வது → உணர்வைப் புரிந்துகொள்வது → பிரச்சினையை வரையறுப்பது → புதிய பார்வையை உருவாக்குவது → செயல்திட்டத்தை உருவாக்குவது என ஆலோசனை முன்னேறுகிறது.

**4. ஆலோசனையின் முக்கிய** Macro Skills

ஆலோசனைப் பள்ளி மற்றும் அணுகுமுறைக்கு ஏற்ப Macro Skills-ன் வகைப்பாடு மாறுபடலாம். நடைமுறைப் பயிற்சிக்காக அவற்றை பின்வரும் முக்கிய கட்டங்களாகப் புரிந்துகொள்ளலாம்.

1. உறவு உருவாக்குதல் – Building the Relationship

2. ஆராய்தல் - Exploration

3. பிரச்சினையை தெளிவுபடுத்துதல் – Understanding & Clarification

4. புதிய பார்வையை உருவாக்குதல் – Insight & Reframing

5. மாற்றத்திற்கான இலக்கை உருவாக்குதல் – Goal Setting

6. செயல்படுத்துதல் - Action & Change

7. நிறைவு மற்றும் தொடர்ச்சி - Closure & Follow-up

Macro Skills-ன் நடைமுறை மாதிரி

**ஒரு எளிய நினைவுக் கட்டமைப்பாக:**

உறவு → ஆராய்தல் → தெளிவுபடுத்துதல் → புரிதல் → இலக்கு → செயல்பாடு → மாற்றம் → தொடர்ச்சி

"கேட்பதில் தொடங்கி – புரிதலில் ஆழ்ந்து – தெளிவில் நிலைத்து – மாற்றத்தில் முடியும் ஆலோசனைப் பயணம்."

Macro Skills **பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை**

• எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பயன்படுத்த வேண்டாம். ஆலோசகர் தன்னிடம் தெரிந்த அனைத்து நுட்பங்களையும் காட்டுவதற்காகப் பயன்படுத்தினால், ஆலோசனை செயற்கையாகிவிடும்.

• அதிகமான கேள்விகள் கேட்க வேண்டாம். அதிகப்படியான கேள்விகள் ஆலோசனையை விசாரணையாக மாற்றிவிடும்.

• உடனடியாக தீர்வு சொல்ல வேண்டாம். ஆலோசகர் "நான் சொல்வதைக் கேள்" என்ற நிலைக்கு சென்றால், ஆலோசனை பெறுபவரின் சுய முடிவெடுக்கும் திறன் குறையலாம்.

• உணர்வுகளைத் தவிர்க்க வேண்டாம். "அதைப் பற்றி கவலைப்படாதீர்கள்" என்பது எளிதான பதில். ஆனால் அது ஒருவரின் உணர்வை நிராகரிக்கக்கூடும்.

• கலாச்சாரப் பின்னணியை மறக்க வேண்டாம். இந்தியச் சூழலில் குடும்பம், திருமணம், சாதி, பொருளாதாரம், கல்வி, மதம், பாலினப் பங்கு, சமூக எதிர்பார்ப்புகள் போன்றவை ஒருவரின் பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கலாம். எனவே ஆலோசகர் கலாச்சார உணர்வுடன் (Cultural Sensitivity) செயல்பட வேண்டும்.

ஒரு நல்ல ஆலோசகர் எல்லா கேள்விகளுக்கும் பதில் தெரிந்தவர் அல்ல.

அவர்: கேட்கத் தெரிந்தவர்,

புரிந்துகொள்ளத் தெரிந்தவர்,

சரியான நேரத்தில் சரியான கேள்வியை எழுப்பத் தெரிந்தவர்,

மௌனத்தையும் கேட்கத் தெரிந்தவர்,

தீர்வைத் திணிக்காமல் தீர்வைக் கண்டுபிடிக்க உதவத் தெரிந்தவர்,

மற்றும் முக்கியமாக -மாற்றத்தின் உரிமை ஆலோசனை பெறுபவரிடமே இருப்பதை மதிக்கத் தெரிந்தவர்.

**அசைபோட அரை நிமிடம் :**

'பேர்திறன்கள் பேறாற்றலை தரும்.

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

## என்னை மன்னியும்

- மன்றாட்டுகளை தீய எண்ணத்தோடும், சின்றின்ப நாட்டங்களை நிறைவேற்றவும் ஏறெடுத்தமைக்காக இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:3)
- உலகுக்கு நண்பராக விரும்பும் எவரும் கடவுளைப் பகைப்பவர் ஆவர், என்பதை அறிந்தும் உலகப் பேராசையுடனும் தீய எண்ணத்துடனும் வாழ்த்தை எண்ணி மனம் வருந்துகிறேன், இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:4)
- அலகையை எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப்போகும் என்பதை அறிந்தும் அலகையையும். அதன் தந்திரச் செயல்களையும் எதிர்க்காமல், தீமையோடு சமரசம் செய்து வாழ்ந்தமைக்காக இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:7)
- கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவர். என்ற வாக்குரிதிதையை மறந்து, கடவுளை அணுகிச்செலலத் தயக்கம் காட்டியமைக்காக இறைவா! என்னை மன்னியும் (யாக் 4:8)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- நீர் வளங்கள் சமமாகப் பகிரப்பட்டு அதனால். விளையும் பயன்கள் எல்லா மக்களையும் சென்றடைய
- காவிரி நீர்ப் பங்கீட்டும் பிரச்சனை சுமூகத் தீர்வைக் காணவும். எல்லா மாநிலங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட
- பெண் குழந்தைகள் மதிக்கப்படவும் அவர்களின் மாண்புடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்திட
- உலகில் போர் நடைபெறும் பகுதிகளில் அமைதி நிலவ
- நல்ல பருவ மழை பெய்து வேளாண்மை செழிக்க
- இந்தியாவில் மதச்சார்பின்மையும், சனநாயகமும் பாதுகாக்கப்படவும் தேர்தல், நீதி மற்றும் ஊடகத்துறைகள் பாரபட்சமின்றி நேர்மையுடன் செயல்பட
- அர்ப்பணம் ஏற்கவுள்ள புதிய நற்செய்திப் பணியாளர்கள் தங்களின் அர்ப்பணத்தின் மேன்மையை உணர்ந்து சீடத்துவ வாழ்வை தன்னார்வத்துடன் மேற்கொள்ள.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- நமது குடும்பங்களில் பெண் குழந்தைகளை மாண்புடன், பாரபட்சமின்றி நடத்துதல்.














படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **செக்காரியா 4-6 அதிகாரங்களுக்குள்**












**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com